


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 288 | 4 Pages | 15.5.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 288 | 4 பக்கங்கள் | 15.5.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**

**நன்மை பயக்கு மெனின்**

**விளக்கம்:** குற்றம் தீர்த்த நன்மையை விளைக்குமானால் பொய்யாச் சொற்களும் வாய்மை என்று கருதத் தக்க இடத்தைப் பெறும்.

## 584 நாட்களுக்கு பிறகு அமெரிக்க பிணை கைதியை விடுவித்த ஹமாஸ்



வாஷிங்டன், மே.15

பாலஸ்தீனத்தின் காசாமுனையை நிர்வகித்து வரும்ஹமாஸ்அமைப்பினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 251 பேரை பிணைக்கைதிகளாக ஹமாஸ் பிடித்து சென்றது. இதையடுத்து காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. அதன்பின் பேச்சுவார்த்தைகள் மூலம் பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவித்தனர். ஹமாசிடம் இன்னும் 50க்கும் மேற்பட்டோர் பிணைக்கைதிகளாக உள்ளனர்.

இதற்கிடையே ஹமாசிடம் பிணைக்கதியாக உள்ள இஸ்ரேல் வாழ் அமெரிக்கரான இடன் அலெக்சாண்டரை விடுவிக்க அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தியது. இதை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டது. இந்தநிலையில்இடன்அலெக்சாண்டரைஹமாஸ்அமைப்பினர்விடுவித்தனர். சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர் கிசுபும் எல்லைவழியாககாசாவில்இருந்துஇஸ்ரேலுக்குஅழைத்துசெல்லப்பட்டார். அங்கு அவரை குடும்பத்தினர் கண்ணீர் மல்க வரவேற்றனர். 584 நாட்களுக்கு இடன் அலெக்சாண்டர் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் ஹமாசிடம் பிணைக்கைதியாக இருந்த கடைசி அமெரிக்க இஸ்ரேலியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் 600 பில்லியன் டாலர்கள் முதலீடு செய்யும் சவுதி அரேபியா



ரியாத், மே.15

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் 4 நாட்கள் அரசு முறை பயணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார். ஜனாதிபதியாக 2வது முறையாக பதவியேற்றப்பின் டிரம்ப் மேற்கொள்ளும் முதல் மத்திய கிழக்கு பயணம் இதுவாகும்.

பயணத்தின் முதல் நாடாக டிரம்ப் இன்று சவுதி அரேபியா சென்றுள்ளார். தனி விமானம் மூலம் ரியாத் சென்ற டிரம்பை சவுதி பட்டத்து இளவரசர் முகமதுபின் சல்மான் விமான நிலையத்திற்கே நேரில் சென்று வரவேற்றார்.

அதன்பின் டொனால்டு டிரம்பும், முகமதுபின் சல்மானும் பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். வர்த்தகம், இருநாட்டு உறவு, இஸ்ரேல்ஹமாஸ்போர், ஈரான்விவகாரம், கச்சாஎண்ணெய்உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், அமெரிக்காவில் 600 பில்லியன் டாலர்களை முதலீடு செய்ய சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் டொனால்டு டிரம்ப் மற்றும் முகமது பின் சல்மான் இடையே கையெழுத்து ஆகியுள்ளது. அதேபோல், அமெரிக்காவில் இருந்து 142 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான ராணுவ ஆயுதங்களை சவுதி அரேபியா கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்த முதலீடு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் இருநாட்டுகள் இடையே உறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "இந்தியாபாகிஸ்தான் சண்டையை நிறுத்தியதே நான்தான்.." டிரம்ப் மீண்டும் அதிரடி




நியூயார்க், மே.15

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சவுதி அரேபியா சென்றுள்ளார். அங்கு அவர் நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது, நான் பதவி ஏற்ற நாளிலேயே போரை நான் விரும்ப மாட்டேன் என்று கூறினேன். அதனால்தான் இந்தியா பாகிஸ்தான் இடையே நடைபெற்று வந்த சண்டையை நான் பேச்சுவார்த்தை மூலம் நிறுத்தினேன்.

வர்த்தகத்தை முன்னிருத்தி இந்த உடன்பாட்டை எட்டவைத்தேன். 'நண்பர்களே, வாருங்கள். ஒரு ஒப்பந்தம் செய்வோம். கொஞ்சம் வர்த்தகம் செய்வோம்" என்று அவர்களிடம் நான் கூறினேன்.

அணு ஏவுகணைகளை வர்த்தகம் செய்ய வேண்டாம். நீங்கள் உருவாக்கும் அழகான பொருட்களை வர்த்தகம் செய்வோம் என்றேன். அவர்கள் இருவரும் மிகவும் சக்திவாய்ந்த தலைவர்கள், மிகவும் வலுவான தலைவர்கள், நல்ல தலைவர்கள், புத்திசாலித் தலைவர்கள். எனவே சண்டையை நிறுத்திவிட்டார்கள். சிறியதாகத் தொடங்கிய போர் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டிருந்த நேரத்தில், அதில் சிக்கி லட்சக்கணக்கான மக்கள் உயிரிழக்கும் நிலை உருவாகி இருந்தது" என்றார்.

இந்தியாபாகிஸ்தான் இடையே நடந்த சண்டையை நான்தான் நிறுத்தினேன் என்று டிரம்ப் ஏற்கனவே கூறியிருந்தார். இந்த நிலையில் அவர் மீண்டும் அதே கருத்தை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உதகையில் புதிதாக திறக்கப்பட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

நீலகிரி , மே.15

உதகையில் புதிதாக திறக்கப்பட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். உதகையில் கடந்த மாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை திறந்து வைத்தார் முதலமைச்சர். ரூ.143.69 கோடி மதிப்பில் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ



மனை கட்டப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல் முறையாக பழங்குடியினருக்கு அதிநவீன வசதிகளுடன் உதகையில் மருத்துவமனை திறக்கப்பட்டது.

## தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அஇஅதிமுக கழக செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு துர்க்கை அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் புதிய காவல் நிலைய வீதியில் அமைந்துள்ள மிகவும் பிரசித்தி பெற்ற அருள் மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவிலில் தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச் செயலாளர் டாக்டர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் புறநகர் மாவட்டம் செயலாளர் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் சி. மகேந்திரன் தலைமையில் துர்க்கை அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது இதில் அமைப்புச் செயலாளர் திண்டுக்கல் முன்னாள் மேயர் மருதராஜ் முன்னிலை வகித்தார் கோவில் பக்தர்களுக்கு அன்னதானத்தை மாவட்ட செயலாளர் துவங்கி வைத்தார்

இதற்கான ஏற்பாடுகளை வர்த்தக அணி மாவட்ட செயலாளர் கோல்டன் ராஜ் செய்திருந்தார் இதில் நகர செயலாளர் ராஜேந்திரன் மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் எஸ்.டி.



நாகராஜ் நாட்ராயன் இலக்கிய அணி செயலாளர் மாதவன் நகர வர்த்தக அணி செயலாளர் ஸ்டுடியோ கார்த்தி ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ் குண்டடம் செந்தில் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் மோகன்ராஜ் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் பங்க் மகேஷ் அம்மா பேரவை செயலாளர் கே.என்.ஆர், நகரத் துணைச் செயலாளர் செல்வி உட்பட பலர் கலந்து கொண்டு சாமி தரிசனம் பெற்று பொதுமக்களுக்கும் பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கினர்..

## சென்னை டு பாலக்காடு ரயிலில் பாத்ரூம் செல்ல இறங்கிய போது 2 வது பெட் கழன்று விழுந்ததில் பெண்ணின் தலையில் அடிபட்டு பலத்த காயம்

சென்னை சென்ட்ரல் முதல் பாலக்காடு வரை செல்லும் வண்டி எண் 22651 பாலக்காடு எக்ஸ்பிரஸில் S5 coach seat number 1 உறங்கி கொண்டிருந்த போது பெண் மீது 2வது பெட் படுத்து இருந்த நபர் பாத்ரூம் செல்ல இறங்கிய போது 2 வது பெட் கழன்று விழுந்ததில் தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது. இரயிலில் முதல் உதவி சிகிச்சை செய்யாமல் பாளையம் முதல் சேலம் வரை சுமார் 2 மணி நேரமாக தலையில் கை வைத்துப் படியே இரத்தம் வராமல் பிடித்துக் கொண்டே வந்தார்.

பயணிகள் அனைவரும் மிடில் படுக்கை இருபுறமும் சரியாக லாக் செய்து இருக்கிறதா என்பதை பரிசோதித்து உறங்கும்படி தயவுசெய்து கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் சில மிடில் பெருத்துக்கள் இதுபோன்று பெரும் விபத்தை ஏற்படுத்தி வருகிறது எனவே ரயில்வே நிர்வாகம் இந்த மிடில் படுக்கை அனைத்து ரயில்களிலும் சரி செய்ய வேண்டும் என்பது பயணிகளின் கோரிக்கையாக இருக்கிறது



## 73 காவல் ஆய்வாளர்கள் மாற்றம் செய்து சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் உத்தரவு

சென்னை, மே.15

சென்னையில் கடந்த சில நாட்களாகவே தொடர்ந்து குற்ற சம்பவங்கள் அரங்கேறி வருகிறது. குறிப்பாக செயின் பறிப்பு, பாலியல் அத்துமீறல், திருட்டு, கொலை, வழிப்பறி போன்ற சம்பவங்கள் நடக்கிறது. இதனை கருத்தில் கொண்டு சென்னை மாநகர காவல்துறையில் பல்வேறு மாற்றங்கள் நடந்துவருகின்றன.

2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடக்கநடைபெற உள்ள நிலையில் சென்னை காவல் துறையில் அதிரடி மாற்றம் அரங்கேறி இருக்கிறது. இந்த நிலையில், சென்னை துரைப்பாக்கம், சாஸ்திரி நகர், ஐஸ் ஹவுஸ், ஐசிஎப், வாஷர்மேன்பேட்டை, புளியந்தோப்பு உள்ளிட்ட காவல் நிலையங்களில் பணியாற்றிய ஆய்வாளர்கள் உள்ளிட்ட 73 காவல் ஆய்வாளர்களை பணியிட மாற்றம் செய்து சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கு மட்டுமல்லாது,

அனைத்து மகளிர் காவல் நிலையம், க்ரைம், குற்றப்பிரிவு உள்ளிட்ட அனைத்து காவல்துறைகளிலும் பணியாற்றிய காவல் ஆய்வாளர்கள் ஒரே நாளில் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



## ஸ்ரீஹரிகோட்டாவில் ரூ.3,985 கோடியில் 3வது ராக்கெட் ஏவுதளம் மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல்



புதுடெல்லி, மே.15

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் தாக்குதல் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை தாக்கி அழித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது.

இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்த நிலையில், எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்து வந்தது. இந்த நிலையில், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கடந்த 10ந்தேதி அறிவித்தார். இதை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் உறுதி செய்தன. இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இந்த அமைச்சரவை கூட்டத்தில் இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' தொடர்பாக ஆலோசனை குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. கூட்டத்தில் பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர், உள்துறை மந்திரி அமித்ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மத்திய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மத்திய மந்திரி அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்தார். அதில், ★ ஸ்ரீஹரிகோட்டாவில் ரூ.3985 கோடி மதிப்பீட்டில் மூன்றாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ★ நாடு முழுவதும் அரிய கனிம வளத்திட்டங்களை செயல்படுத்த ரூ.16,300 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ உத்தர பிரதேசத்தில்ரூ.3,000 கோடியில் செமிகண்டக்டர் ஆலைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது என்றார்.




## பா.ஜ.க.அ.தி.மு.க. கூட்டணியில் ஓ. பி.எஸ். நீடிக்கிறாரா? வைத்திலிங்கம் எம்.எல்.ஏ. பதில்

சென்னை, மே.15

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இந்த நிலையில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறும் கட்சிகளை முடிவு செய்வதற்காக, கடந்த ஏப்ரல் 11ந்தேதி சென்னை வந்த மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி உறுதியானது என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அமித்ஷா, தேசிய அளவில் மோடி தலைமையிலும், மாநில அளவில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலும் தேசிய ஜனநாயக கூட்டணியாக தேர்தலை சந்திப்போம். அ.தி.மு.க.வின் உட்கட்சி விவகாரத்தில் நாங்கள் தலையிட போவதில்லை என்றார்.

1998ல் இருந்து அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து வருகிறோம். இது இயல்பாக அமைந்த கூட்டணி. 2026ம் ஆண்டு தேர்தலில் கூட்டணி ஆட்சிதான் இருக்கும். தமிழ்நாட்டில் இணைந்துதான் ஆட்சியமைக்க போகிறோம். எடப்பாடி பழனிசாமி தலைமையில் கூட்டணி அமைகிறது. தேர்தல் விஷயங்களில் இணைந்து செயல்படுவோம். வெற்றிக்கு பிறகு மற்றவை குறித்து முடிவு செய்யப்படும் என்றும் கூறினார்.

இந்த நிலையில், பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி உருவான பின்னர், தமிழக முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தரப்பிற்கு உள்ள முக்கியத்துவம் பற்றி அவருடைய ஆதரவு எம்.எல்.ஏ.வான வைத்திலிங்கத்திடம், சென்னை மயிலாப்பூரில் செய்தியாளர்கள் இன்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்து பேசிய அவர், எங்களை தவிர்க்க முடியாது. தேசிய ஜனநாயக கூட்டணியில் தொடர்வது பற்றி ஆதரவாளர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இதுபற்றி ஓ. பன்னீர் செல்வம் நாளை அறிவிப்பார் என கூறியுள்ளார்.

# தூத்துக்குடி: மே 15ல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தூத்துக்குடி மே.15
தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

2025ம் ஆண்டு மே மாதத்திற்கான 'விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்' 15.5.2025 அன்று காலை 10 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் "முத்து அரங்கத்தில்" வைத்து நடைபெற உள்ளது. எனவே தூத்துக்குடி மாவட்ட விவசாயப் பெருமக்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தபட்ட குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# செங்கல்பட்டில் வைரலாகும் நல்ல பாம்பு சாமியார்... சிவன் போல் பக்தர்களுக்கு அருளாசி



செங்கல்பட்டு, மே.15
செங்கல்பட்டு மாவட்டம் மலாலிநத்தம் சித்தேரிக்கரை பகுதியில் அருள்மிகு ஸ்ரீ ஞான சக்தி நாகாத்தம்மன் கோவில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் வருடாந்திர மகா கும்பாபிஷேகம் மற்றும் பால்குடம் எடுக்கும் விழா நடைபெறுவது வழக்கம். அதேபோல் இந்தாண்டும் சித்ரா பவுர்ணமி தினத்தை முன்னிட்டு கடந்த சில தினங்களுக்கு முன்பு யாக சாலைகள் அமைத்து 108 கலசங்களுடன் கூடிய மகா கும்ப கலசம் நிறுத்தப்பட்டு பல்வேறு வேள்விகள் நடைபெற்று முடிந்தது. தொடர்ந்து 11ஆம் தேதி காலை அருள்மிகு தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் தலைமையில் கும்ப கலசம் புறப்பட்டு நாகாத்தம்மனுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து கும்பாபிஷேகத்தின் போது உயிருடன் உள்ள நல்ல பாம்பு எடுத்து வரப்பட்டு தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் மற்றும் பக்தர்கள் முன்பு மேஜை மீது வைக்கப்பட்டது. அப்போது நல்ல பாம்பு படம் எடுக்காமல் அமைதியாக படுத்திருந்ததால் பாம்பை பிடித்து வந்த நபர் பாம்பின் முன்பு துணியை அசைத்து காட்டி அதனை எரிச்சல் அடைய செய்தார். தொடர்ந்து பாம்பின் மீது பூக்கள் தூவப்பட்டு பூஜை செய்து கொண்டிருந்த போது பாம்பு அங்கிருந்து நகர்ந்து தான் அடைத்து வைத்து எடுத்து வரப்பட்ட ஓலை பெட்டியின் உள்ளே படுக்க சென்ற சென்ற நிலையில் பாம்பை எடுத்து வந்த நபர் அதனை கையால் உலுக்கி மீண்டும் படம் எடுக்க செய்தார்.

பின்னர் நல்ல பாம்பிற்கு கற்பூரம் ஊதுவர்த்தி ஆகியவற்றால் தீபாராதனை காட்டிய பின்னர் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் நல்ல பாம்பை கையால் தூக்கி பக்தர்கள் முன்பு காட்டியும், தனது கழுத்தில் பாம்பை மாலையாக போட்டுக்கொண்டு சிவன் போல் பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார். இந்த சம்பவம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள நிலையில் வனத்துறையினர் இது தொடர்பாக உரிய விசாரணை நடத்தி வேண்டும் என வன உயிரின ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபோல் கடந்த 2019ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத்தில் பெண் சாமியார் ஒருவர் நல்ல பாம்பை கழுத்தில் போட்டுக்கொண்டு அருள்வாக்கு அளித்தார். அது தொடர்பான வீடியோ காட்சிகள் இணையதளத்தில் வைரலான நிலையில் பெண் சாமியார் கபிலா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தநிலையில் செங்கல்பட்டில் நல்ல பாம்பை கழுத்தில் போட்டுக் கொண்டு சாமியார் ஒருவர் பக்தர்களுக்கு அருளாசி தரும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நெல்லையில் நகைகளை திருப்பி கொடுக்காத அக்காவின் கணவர் கைது




திருநெல்வேலி, மே.15
நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவி, கூனியூர், முதல் தெருவை சேர்ந்த பாண்டியன் (வயது 33) சென்னையில் பணிபுரிந்து வருவதால் குடும்பத்துடன் அங்கே குடியிருந்து வருகிறார்.

இவர் கடந்த 5.1.2024 அன்று சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தனது சொந்த ஊரான கூனியூருக்கு வந்துள்ளார். இந்நிலையில் வங்கி லாக்கரிலிருந்து நகைகளை எடுத்து பயன்படுத்திவிட்டு அவசர வேலை காரணமாக கிளம்பும்போது நகைகளை வீட்டின் பீரோவில் வைத்து பூட்டிவிட்டு, வீட்டின் சாவியை வீட்டை பராமரிப்பதற்காக தனது அக்காவின் கணவரான கூனியூர், மேலவடக்கு தெருவை சேர்ந்த ராமகிருஷ்ணன்(எ) ரமேஷ் (41) என்பவரிடம் ஒப்படைத்து விட்டு சென்றுள்ளார்.

பின்பு 10.6.2024 அன்று பாண்டியன் வீட்டிற்கு வந்து பார்த்தபோது நகைகளை காணவில்லை. மேலும் இதைப் பற்றி ராமகிருஷ்ணனிடம் பாண்டியன் கேட்டபோது, தான் எடுத்து அடகு வைத்து விட்டதாகவும் திருப்பி தந்து விடுவேன் என்றும் கூறியுள்ளார். ஆனால் இது வரை ராமகிருஷ்ணன்(எ) ரமேஷ் நகைகளை திருப்பித் தராமல் இருந்து வந்துள்ளார். இதுகுறித்து பாண்டியன் சேரன்மகாதேவி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் அன்னஜோதி வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு ராமகிருஷ்ணன் (எ) ரமேஷை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

# நெல்லையில் கூட்டுக் கொள்ளை நடத்த திட்டம் தீட்டிய 6 பேர் கைது




திருநெல்வேலி மே.15
திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி மற்றும் போலீசார் ரோந்து சென்றனர். அப்போது கீழநத்தம் செல்லும் சாலையில் உள்ள சுடலை கோவில் அருகே மறைவான இடத்தில் தென்காசி மாவட்டம், வல்லம் பகுதியைச் சேர்ந்த கதிர்வேல் (வயது 22), மதுரை மாவட்டம் தாதக்கிணறு பகுதியைச் சேர்ந்த முனியசாமி (25), வெங்கடேசன்(26), கண்ணதாசன்(21), வசந்தகுமார்(24) மற்றும் முனீஸ்வரன்(25) ஆகிய 6 நபர்கள் சேர்ந்து அவ்வழியே செல்லும் வாகனங்களை வழிமறித்து நகை, பணம் கொள்ளை அடிப்பதற்காக பேசிக்கொண்டிருந்த போது, அவர்களை போலீசார் மடக்கி பிடித்து விசாரணை செய்தனர். அதில் அவர்கள் கூட்டுக் கொள்ளை நடத்த திட்டம் தீட்டியது தெரியவந்தது. அதன்பேரில் அவர்களிடமிருந்து அரிவாள் ஒன்று, இரும்புகம்பி ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி வழக்குப்பதிவு செய்து அவர்கள் 6 பேரையும் கைது செய்து போலீசார் விசாரணை செய்தனர்.

# மக்களின் சட்டப்பூர்வ உரிமைகளை திமுக அரசு நிலைநாட்டி வருகிறது: உதயநிதி ஸ்டாலின்

சென்னை, மே.15
துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா கிடைப்பதில் இருந்த சிரமங்களை நீக்கி பட்டா வழங்கிட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டதன் பேரில், ஓராண்டுக்குள் 1.38 இலட்சம் பட்டாக்களை நம் திராவிட மாடல் அரசு வழங்கி இருக்கிறது.



இதன் தொடர்ச்சியாக இன்றைய தினம், திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில் கத்திவாக்கத்தைச் சேர்ந்த 1500 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி வாழ்த்தினோம்.

இந்த நிகழ்ச்சியில், வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்துக்கு நிலம் கொடுத்ததற்காக மாற்று இடம் பெற்ற 400 பயனாளிகளுக்கும் அவர்களுக்கான பட்டாக்களை வழங்கினோம். உண்ண உணவு உடுத்த உடை இந்த வரிசையில் 'இருக்க இடம்' எனும் அடிப்படைத் தேவையை மட்டுமின்றி, அந்த இடத்துக்கான மக்களின் சட்டப்பூர்வ உரிமைகளையும் நம்முடைய கழக அரசு நிலைநாட்டி வருகிறது .

மேலும், அப்பகுதி மக்களுக்காக 18 ஆயிரம் பட்டாக்களை தயார் செய்யும் பணி நடைபெற்று வரும் நிலையில், விரைவில் அவற்றையும் வழங்கிடுவோம் என்று உறுதியளித்தோம்.

பட்டாக்களை பெற்ற கத்திவாக்கம் பகுதி மக்களுக்கு என் அன்பும், வாழ்த்தும். என தெரிவித்துள்ளார்.

# பெண்கள் அச்சமின்றி புகாரளிக்க தைரியமூட்டும் முன்னுதாரண தீர்ப்பு: நயினார் நாகேந்திரன்

சென்னை, மே.15
தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், பல பெண்களின் வாழ்வை சீரழித்து, தமிழ்நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொடர்புடைய 9 பேரும் குற்றவாளிகள் என்று உறுதி செய்து, அவர்கள் அனைவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது மிகவும் வரவேற்பிற்குரியது.

பெண்கள் பாதுகாப்பை உருக்குலைக்கும் குற்றவாளிகள் நீதியின் பிடியில் இருந்து என்றும் தப்பிக்க முடியாது என்பதை ஆணித்தரமாக உணர்த்தும் விதமாக இத்தீர்ப்பு அமைந்துள்ளது. பாதிக்கப்படும் பெண்கள் அச்சமின்றி புகாரளிக்க தைரியமூட்டும் முன்னுதாரண தீர்ப்பு இது.

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களும், போக்சோ வழக்குகளும் தற்போது தொடர்ந்து அதிகரித்து வரும் வேளையில், குற்றமிழைக்க முற்படும் கயவர்களுக்கு ஓர் எச்சரிக்கை மணியாக இத்தீர்ப்பு இருக்கும் என நம்புகிறேன். நீதியை நிலைநாட்ட போராடிய அனைவருக்கும், வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கிய நீதிமன்றத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். என தெரிவித்துள்ளார் .

# கணவரிடம் விவாகரத்து பெற்றுவிட்டு வாலிபருடன் வசித்த பெண் கர்ப்பம்: வேறு பெண்ணை வாலிபர் மணந்ததால் நிர்க்கதியானார்



திருவள்ளூர், மே.15
திருவள்ளூர் அருகே உள்ள குன்னவலம் கிராமத்தை சேர்ந்தவர் காவியா (32). இவருக்கு கடந்த 2013ம் ஆண்டு ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவருடன் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு 10 வயதில் மகன் உள்ளார். தம்பதி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்ட காரணத்தால் கடந்த 2019ம் ஆண்டு முதல் இருவரும் பிரிந்து தனியாக வசித்தனர். இதையடுத்து பாலகிருஷ்ணன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இந்தநிலையில், கடந்த 2020ம் ஆண்டு குன்னவலம் கிராமத்தை சேர்ந்த ரவீந்திரன் என்பவர் காவியாவுடன் நட்பாக பழகி வந்துள்ளார். இதை பயன்படுத்திய ரவீந்திரன், காவியாவை திருமணம் செய்துகொள்கிறேன். தான் அரசு வேலையில் உள்ளதால் குடும்பத்தை நன்றாக கவனித்துகொள்வேன்' என்று தெரிவித்து காவியாவுடன் நெருக்கமாக பழகியுள்ளார்.

இதன் பிறகு சென்னை வியாசர்பாடியில் வீடு பார்த்து வைத்து காவியாவுடன் வாழ்ந்து வந்துள்ளார். இதன்காரணமாக காவியா 7 மாதம் கர்ப்பமானார். இதனிடையே கடந்த ஒன்றரை வருடத்துக்கு முன்பு காவியாவுக்கு தெரியாமல் வேறு பெண்ணை ரவீந்திரன் திருமணம் செய்து வாழ்ந்துவந்துள்ளார். இது குறித்து தெரிய வந்ததும் அதிர்ச்சி அடைந்த காவியா கேட்டபோது, ''வேறு வழியில்லாமல் திருமணம் செய்துகொண்டேன். என்னை மன்னித்து விடு' என்று ரவீந்திரன் கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக திருவள்ளூர் மாவட்ட அலுவலகத்தில் காவியா புகார் கொடுத்தார். திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குடிநீர் வழங்கக்கோரி திரிசூலம் ஊராட்சி மக்கள் மறியல்



ஆலந்தூர், மே.15
குடிநீர் வழங்கக்கோரி திரிசூலம் ஊராட்சி மக்கள் மறியல் நடத்தினர். சென்னை திரிசூலம் ஊராட்சிக்கு உட்பட்ட உழைப்பாளர் நகர் பகுதியில் ஒரு மாதமாக குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. இதனால் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள் நேற்றிரவு திரண்டு வந்து மூவரசன்பட்டு பிரதான சாலையில் மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்து பாதிக்கப்பட்டு பரபரப்பு நிலவியது. இது குறித்த தகவல் கிடைத்ததும் மடிப்பாக்கம் போலீஸ் உதவி கமிஷனர் முத்துராஜா, பழவந்தாங்கல் இன்ஸ்பெக்டர் ரெங்கநாதன் ஆகியோர் போலீசாருடன் சென்று சாலை மறியலில் ஈடுபட்டவர்களை சமாதானப் படுத்தினர்.

குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர். அப்போது பொதுமக்கள், ''ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர். குடிநீர் கிடைக்காமல் அவதிப்பட்டுவந்ததால் சாலை மறியலில் ஈடுபட்டோம். அதிகாரிகள் எங்களுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்'' என்றனர். இதையடுத்து திரிசூலம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அந்தோணி, ''இன்று காலை 10 மணிக்குள் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்' என உறுதி அளித்ததையடுத்து சாலை மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது.

# மதுரை சித்திரை திருவிழா; விடிய, விடிய தசாவதாரத்தில் அருள்பாலித்த அழகர்: ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து பரவசம்



மதுரை, மே.15
மதுரை சித்திரை திருவிழாவில் மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம் என தசாவதாரங்களில் அழகர் அருள்பாலிக்கும் நிகழ்வு நேற்றிரவு முதல் இன்று காலை வரை விடிய, விடிய நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள், தரிசனம் செய்து பரவசமடைந்தனர். மதுரை மாவட்டம், அழகர்கோவில் சித்திரை திருவிழா கடந்த 8ம் தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கியது. 10ம் தேதி தங்கப்பல்லக்கில் அழகர், மதுரை புறப்பட்டு வந்தார். விழாவின் சிகர நிகழ்ச்சியான அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடந்தது. பின்னர் மதுரை வண்டியூரில் உள்ள வீரராகவ பெருமாள் கோயிலுக்கு இரவு 11 மணியளவில் சென்றார். அங்கு நேற்று காலை அழகருக்கு திருமஞ்சனம் செய்யப்பட்டு பின் சைத்திர யோபசாரம் நடந்தது. பின்னர் ஏகாந்த சேவையில் எழுந்தருளிய அழகர், வீரராகவ பெருமாள் கோயிலை வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பின்னர் சேஷ வாகனத்தில் சுந்தரராஜப்பெருமாள், திருக்கோலத்தில் புறப்பாடாகிய அழகர், வண்டியூர் பகுதி வைகையாற்றில் உள்ள தேனூர் மண்டகபடியில் எழுந்தருளினார். அங்கு நாரைக்கு முக்தி அளித்தலும், மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. தொடர்ந்து, தேனூர் மண்டகப்படியை வலம் வந்த அழகர், அங்கிருந்து புறப்பாடாகியபோது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கைகளில் சர்க்கரை தீபம் ஏந்தி சாமி தரிசனம் செய்தனர். மாலையில் அனுமார் கோயிலில் அழகர் எழுந்தருளினார். அங்கு அங்கப்பிரதட்சணம் நடைபெற்றது. பின் மேளதாளம் முழங்க மதுரை ஆழ்வார்புரத்தில் உள்ள ராமராயர் மண்டபத்துக்கு புறப்பட்டார். அந்த மண்டபத்தில் இரவு 10 மணிக்கு தொடங்கி விடிய, விடிய தசாவதாரம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், முத்தங்கி சேவை, மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வாமன அவதாரம், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், மோகினி அவதாரம் உள்ளிட்ட தசாவதாரங்களில் அழகர் பக்தர்களுக்கு காட்சி தந்தார். இன்று காலை 6 மணிக்கு மோகினி அவதாரத்தில் வீதியுலா வந்த அழகர், பகல் 12 மணிக்கு ராமராயர் மண்டபத்தில் ராஜாங்க கோலத்தில் எழுந்தருளினார். தொடர்ந்து நாளை அதிகாலை 2.30 மணிக்கு தல்லாகுளத்தில் உள்ள ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்தில் திருமஞ்சனமாகி, கள்ளர் திருக்கோலத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். அதே திருக்கோலத்தில் கருப்பணசாமி கோயில் சன்னதியில் வையாழி ஆனவுடன் அங்கிருந்து அழகர் மலைக்கு புறப்படுகிறார். 16ம் தேதி அப்பன் திருப்பதி, கள்ளந்திரி வழியாக காலை 10 மணிக்கு மேல் இருப்பிடம் சென்றடைகிறார். 17ம் தேதி உற்சவ சாந்தியுடன் சித்திரை திருவிழா நிறைவு பெறுகிறது.

# கோவையில் போக்குவரத்துக் காவலர்களுக்கு பேட்டரி ஃபேன் வசதி கொண்ட ஹெல்மெட் வழங்கிய காவல் ஆணையர்!!



கோவை, மே.15
கோவை மாநகரில் கோடை வெயிலை சமாளிக்கும் வகையில் போக்குவரத்துக் காவலர்களுக்கு பேட்டரி ஃபேன் வசதி கொண்ட ஹெல்மெட்டை காவல் ஆணையர் வழங்கினார். முதற்கட்டமாக தலா ரூ.15,000 மதிப்புகொண்ட இந்த ஹெல்மெட் 36 போக்குவரத்துக் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம், தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் இளங்கலை காட்சிக்கலை பட்டபடிப்பிற்கான விண்ணப்பங்கள் வரவேற்பு




சென்னை, மே.15
சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் 20252026 கல்வியாண்டில் இளங்கலை காட்சிக் கலை (Bachelor of Visual Arts) எனும் நான்காண்டு கால பட்டப்படிப்பிற்கான கீழ்க்கண்ட பிரிவுகளில் மாணவர்சேர்கைக்கு இணைத்தளம் வழியாக விண்ணப்பங்கள் 28.04.2025 முதல் பெறப்பட்டு வருகிறது.

1. இளங்கலை காட்சிக் கலை (ஒளிப்பதிவு)
2. இளங்கலை காட்சிக் கலை (எண்மிய இடைநிலை)
3. இளங்கலை காட்சிக் கலை (ஒலிப்பதிவு)
4. இளங்கலை காட்சிக் கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்)
5. இளங்கலை காட்சிக் கலை (படத்தொகுப்பு)
6. இளங்கலை காட்சிக் கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்)

இளங்கலைக் காட்சிக் கலை பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்க 28.05.2025 கடைசி நாள் என்பதால், கலை ஆர்வம் உள்ள மாணவ/மாணவியர் விருப்பமுள்ள பாடப்பிரிவுகளுக்கு www.filminstitute.tn.gov.in எனும் இணையத்தளத்தில், மாணவர் சேர்க்கைக்கான படிவத்தினை பயனாளர் கையேட்டின் (User Manual) அறிவுத்தலின் படி பூர்த்தி செய்து, விண்ணப்ப கட்டணம் செலுத்தி பதிவு செய்தும், அனைத்து உரிய ஆவணங்களுடன் 28.05.2025 மாலை 5.00 மணிக்குள் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# பொள்ளாச்சி வழக்கு தீர்ப்பு பெண்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது: கனிமொழி கருணாநிதி எம்.பி பேட்டி



தூத்துக்குடி, மே.15

தூத்துக்குடி நாடாளுமன்ற அலுவலகத்தில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

"பொள்ளாச்சியில் பெண்களுக்கு நடத்த கொடுமைக்கு வழங்கப்பட்ட நியாயமான தீர்ப்பு. குற்றவாளிக்கு சரியான தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்களின் விபரங்கள் வெளியிடாமல் அவர்களுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இந்தத் தீர்ப்பினால் பெண்களுக்கு நம்பிக்கை கிடைக்கும். முதல்அமைச்சர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக திமுக ஆட்சிக்கு வந்தால் பாலியல் வன்கொடுமை வளர்ச்சிக்கு சிபிஐக்கு மாற்றி தண்டனை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தார். அது நிறைவேறி உள்ளது.

அதிமுக ஆட்சியில் இந்த வழக்கை விசாரிக்க முடியாமல் குற்றவாளிகளை பாதுகாத்து வந்தனர். ஆனால் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் இணைந்து இந்த வழக்கை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என்று கூறி வந்தனர் அதன் அடிப்படையில், சிபிஐ விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட்டு தீர்ப்பு கிடைத்துள்ளது. மேலும் பாலியல் குற்றங்களுக்கு எந்த கட்சியை சார்ந்தவராக இருந்தாலும் குற்றம் செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு பாத்துக்காப்பான மாநிலமாக உள்ளது. இன்று அதிமுக வெட்கி தலைகுனிய வேண்டும். அதிமுக ஆட்சியில் யாரை காப்பாற்ற நினைத்தார்களோ அவர்களுக்குதற்போதுதண்டனை கிடைத்துள்ளது.

இந்த தீர்ப்பு வரவேற்கப்பட வேண்டிய தீர்ப்பு நல்ல தீர்ப்பு என்று தெரிவித்தார்.

# கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா: இரவு 7 மணி வரை சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி



திண்டுக்கல், மே.15

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு கோடைசீசனைமுன்னிட்டு சுற்றுலாபயணிகள்வருகை அதிகரித்துள்ளது. இந்த மாத இறுதிவாரத்தில் கோடைவிழா, மலர்கண்காட்சி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவரும்நிலையில் பிரையண்ட்பூங்காவில் மலர்கள் பூத்துக்குலுங்க துவங்கிவிட்டது.

இதனை சுற்றுலாபயணிகள் கண்டு ரசித்தும், புகைப்படம் எடுத்தும் வருகின்றனர். பத்துநாட்கள்நடைபெறும் கோடைவிழாவில் படகு போட்டி, மீன்பிடித்தல் போட்டி, விளையாட்டுப்போட்டிகள் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற உள்ளது. பிரையண்ட் பூங்காவில் மலர் கண்காட்சி துவங்கி பத்து நாட்கள் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அனைத்து துறையினரும் இணைந்து செய்து வருகின்றனர்.

கொடைக்கானலில் தற்போது இதமான தட்ப வெப்பநிலை நிலவுவதால் கடந்த சில தினங்களாக சுற்றுலாபயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. ஊட்டி கோடை விழா மலர் கண்காட்சி நிறைவு பெற்ற பிறகு, இதன் தொடர்ச்சியாக கொடைக்கானலில் கோடைவிழா, மலர்கண்காட்சிக்கான தேதிகள் அறிவிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் இனி இரவு 7 மணி வரை சுற்றுலாப்பயணிகள் அனுமதிக்கப்படுவர் என்று பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன்படி கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் மலர் கண்காட்சி சில நாட்களில் தொடங்க உள்ள நிலையில், பார்வையாளர்கள் அனுமதி நேரம், மாலை 6 மணிக்கு பதில், இனி இரவு 7 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# காஞ்சியில் மரங்களில் அடிக்கப்பட்ட ஆணிகளை அகற்றிய தன்னார்வ அமைப்பினர்



காஞ்சிபுரம், மே.15

காஞ்சிபுரத்தில் சுற்றுசூழலை பாதுகாக்கும் விதமாக மரங்களில் அடிக்கப்பட்டுள்ள ஆணி களை பிடுங்கும் பணியில் தன்னார்வ அமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர். காஞ்சிபுரம் மாநகர சாலைகளில் இரு புறங்களில் உள்ள மரங்களில் தனியார் வணிக நிறுவனங்கள் விளம்பரத்திற்காக ஆணி அடித்து பலகைகள் வைக்கின்றனர். இதனால் மரங்கள் பட்டு நாளடைவில் அழிந்துவிடுகிறது.

இந்நிலையில் காஞ்சிபுரத்தை சேர்ந்த பசுமை இந்தியா என்ற தன்னார்வ அமைப்பு, பல்வேறு தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து சாலையில் இரு புறங்களில் உள்ள மரங்களில் ஆணி அடித்து வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகளை அப்புறப்படுத்தி மரத்தில் இருக்கும் ஆணியை பிடுங்கி மஞ்சள் தடவும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சுற்று சூழலை பேணி காக்கும் விதமாகவும், மரங்களை பாதுகாக்கும் வகையிலும் இந்த பணியை முன்னெடுத்துள்ளதாகவும், தொடர்ந்து பணி நடக்கும் எனவும் தன்னார்வ அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

# பொள்ளாச்சி வழக்கின் தீர்ப்பு...தக்க தண்டனை வழங்கிய நீதித்துறைக்குப் பாராட்டுகள் கமல்ஹாசன்



சென்னை, மே.15

மக்கள் நீதி மய்யம் கட்சியின்தலைவர்கமல்ஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அதிகாரத் திமிரில், ஆணவத்தோடு ஒரு நாகரிக சமூகம் நினைத்துப் பார்க்கவும் கூசும் கொடுமையைப் பொள்ளாச்சியில் நடத்திக் காட்டியகுற்றவாளிகளுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை வழங்கியிருக்கும் தீர்ப்பை மக்கள்நீதி மய்யம் வணங்கி வரவேற்கிறது. கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் கல்லூரி மாணவிகளை கடத்திச் சென்று, கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் 2019ல் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இளம் பெண்கள் கதறிக்கொண்டு தப்ப முயலும் வீடியோக்கள் வெளியாகி மக்கள் மனசாட்சியை உலுக்கின.

இந்த வழக்கில் துணிந்து சாட்சியம் அளித்த பெண்கள் வணங்கிப் போற்றத்தக்கவர்கள். போலியான அவதூறுகளுக்கு அஞ்சாமல், பிறழ்சாட்சிகளாக மாறாமல் தாங்கள் பாதிக்கப்பட்டதை விசாரணையில் வெளிப்படுத்திய அவர்களது தீரம் பாராட்டத்தக்கது.

பிறரும் இதுபோல் பாதிக்கப்படாமல் இருக்க இந்தத் துணிச்சல் மிகுந்த செயல்பாடு வழிவகுக்கும்.

இது போன்ற குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களை இந்தச் சமூகம் இழிவாகப் பார்க்கலாகாது என்பது உணர்த்தப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்று. வழக்கை சரியான முறையில்நடத்திச்சென்று, தக்க தண்டனை வழங்கிய நீதித்துறைக்குப் பாராட்டுகள்.என கமல்ஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டது.

# சேலம்: ஓடும் பஸ்சில் இருந்து தவறி விழுந்து குழந்தை உயிரிழப்பு

சேலம் மே.15

தருமபுரி மாவட்டம் முத்தம்பள்ளியை சேர்ந்தவர் ராஜதுரை.இவரதுமனைவி முத்துலெட்சுமி. இந்த தம்பதிக்கு 7 வயதில் பெண் குழந்தையும், 9 மாத நரணிஷ் என்ற ஆண் குழந்தையும் இருந்தனர்.

இதனிடையே, ராஜதுரை கோவையில் வேலை செய்துவரும் நிலையில் குடும்பத்துடன் நேற்று கோவைக்கு புறப்பட்டுள்ளார். சேலத்தில் இருந்து கோவை செல்லும் அரசு பஸ்சில் நேற்று இரவு புறப்பட்டுள்ளனர். ராஜதுரையும் அவரது மனைவி முத்துலெட்சுமியும் குழந்தைகளுடன் நடத்துனரின் இருக்கைக்கு பின்னால் உள்ள இருக்கையில் அமர்ந்துள்ளனர்.

இந்நிலையில், சேலம் மாவட்டம்சங்ககிரிஅருகே சென்றுகொண்டிருந்த போது பஸ் டிரைவர் திடீரென பிரேக் படித்ததால் பின் இருக்கையில் இருந்த ராஜதுரை நிலைதடுமாறியுள்ளார். அப்போது அவர் தோளில் இருந்து அவரது மகன் நரணிஷ் நழுவி பஸ்சின் முன் பக்க கதவு வழியாக சாலையில் விழுந்தார். உடனடியாக டிரைவர் பஸ்சை நிறுத்தியுள்ளார். பஸ்சில் இருந்து சாலையில் விழுந்த குழந்தை படுகாயமடைந்துள்ளது.

இதையடுத்து குழந்தையை மீட்ட பெற்றோர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

குழந்தை நரணிசை பரிசோதித்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 2040ல் மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் திட்டம் செயல்பாட்டுக்கு வரும்: இஸ்ரோ தலைவர் பேட்டி



தேனி, மே.15

தேனியில் இஸ்ரோ தலைவர் நாராயணன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

சந்திரயான் 5 திட்டம், சந்திரயான் 3 போல் ஒரு லேண்டர். இது 100 நாட்கள் நிலவில் ஆய்வு செய்யும் வகையில் உருவாக்கப்படுகிறது. மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் திட்டத்தின் ஆரம்ப கட்டப்பணிகள் தொடங்கி நடந்து வருகிறது. இந்த திட்டம் 2040ம் ஆண்டு செயல்பாட்டுக்கு வரும். மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இஸ்ரோவின் 3வது ஏவு தள மையம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைக்க உள்ளோம். இரண்டாவது ஏவு தளம் மையம் குலசேகரபட்டினத்தில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக 95 சதவீதம் இடங்களை தமிழக அரசு ஒதுக்கி தந்து விட்டது. வரும் 2026ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் குலசேகரப்பட்டினத்தில் இருந்து ராக்கெட் விண்ணில் ஏவப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# குற்றவாளிகளை காப்பாற்ற நடந்த முயற்சிகளை தி.மு.க முறியடித்ததே நீதி கிடைக்க காரணம்: உதயநிதி ஸ்டாலின்



சென்னை, மே.15

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

நினைத்தாலும் மனம் பதைபதைக்கும் பொள்ளாச்சி பாலியல் கொடூர வழக்கில் அதிமுக நிர்வாகி உள்ளிட்ட 9 குற்றவாளிகளுக்கும்சாகும் வரை ஆயுள் தண்டனை கிடைத்திருக்கிறது. எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக ஆட்சியின்போது நடந்த பெண்களுக்கு எதிரான இந்தக் கொடூரம் தமிழ்நாடு வரலாற்றில் ஒரு கருப்பு பக்கம்.

குற்றவாளிகளை காப்பாற்ற நடந்த முயற்சிகளை அன்று எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க, மக்களின் துணையோடு முறியடித்ததே பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இன்றைக்கு நீதி கிடைக்க காரணம். என தெரிவித்துள்ளார்.

# சென்னை: நின்றுகொண்டிருந்த லாரி மீது மற்றொரு லாரி மோதி விபத்து; டிரைவர் பலி



சென்னை மே.15

சென்னையில் வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் இன்று மாலை சென்றுகொண்டிருந்த லாரி திடீரென பழுதாகி நின்றது. இதனால், லாரி சாலையிலேயே நிறுத்தப்பட்டு பழுது நீக்க டிரைவர் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்.

அப்போது, வெளிவட்ட சாலையில் வேகமாக வந்த மற்றொரு லாரி நின்றுகொண்டிருந்த லாரியின் பின்புறம் மோதியது. இந்த கோர விபத்தில் மோதிய லாரியின் டிரைவர் பார்த்திபன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், உயிரிழந்த டிரைவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கு: புனிதர் வேடம் தரிக்க முயல்கிறார் பழனிசாமி ஆர்.எஸ்.பாரதி தாக்கு



சென்னை, மே.15

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பொள்ளாச்சி பாலியல் வழக்குத் தீர்ப்பை வரவேற்று அறிக்கை விட்டிருக்கும் அதிமுக, தன்னை தூயவன் போலக் காட்ட முயல்கிறது. முக்கியமான வழக்கில் கருத்து சொல்ல முயலும்போதுநிர்வாகிகள் யாருடைய பெயரையும் பயன்படுத்தாமல் பொத்தாம் பொதுவாக 'அதிமுக அறிக்கை' எனவெளியிட்டிருக்கிறார்கள். பிறகு என்ன நினைத்தார்களோ எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிதிருவாய் மலர்ந்திருக்கிறார். 'நடுநிலையோடு சிபிஐ. விசாரணைக்கு உத்தரவிட்டேன். அதற்கான நீதியே இன்று கிடைத்துள்ளது' என சொல்லியிருக்கிறார்.

அதிமுகவினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என தெரிந்ததுமே பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை அன்றைக்கு ஆட்சியில் இருந்த எடப்பாடி பழனிசாமி அரசு மூடி மறைக்க முயன்றது. திமுக உள்ளிட்ட கட்சிகள், மகளிர் அமைப்புகள், மாணவர்கள் எனத் தமிழ்நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் நடந்த நிலையிலும் பழனிசாமி அரசு வழக்கை சிபிஐக்கு மாற்றவில்லை.

2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேதியை மார்ச் 10ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்த பிறகு பொள்ளாச்சி விவகாரம்தேர்தலில்பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என அஞ்சி இரண்டு நாள் கழித்து அதாவது மார்ச் 12ம் தேதி சிபிஐ விசாரணைக்கு பழனிசாமி அரசு பரிந்துரைத்தது. வழக்கை சிபிஐ விசாரணைக்கு ஒப்படைக்க 14ம் தேதி அரசாணைவெளியிட்டார்கள்.

அதன்படி சிபிஐக்கு மாற்றினார்கள் என்றால் இல்லை. வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்காமல் இழுத்தடித்தார்கள். ''பொள்ளாச்சி பாலியல் வழக்கை சிபிஐக்கு மாற்றுவதாக அரசு அறிவித்த பிறகும் சிபிசிஐடி விசாரிப்பது ஏன்?'' என்று சென்னை உயர் நீதிமன்றம் 2019 மார்ச் 29ம் தேதி கேள்வி எழுப்பியது. உடனே தமிழக அரசு வழக்கறிஞர் 'வழக்கை சிபிஐயிடம் ஒப்படைக்கும் பணி நடக்கிறது'' எனச் சமாளித்தார்.

'பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிபிஐ விசாரணையை உயர் நீதிமன்றம் கண்காணிக்கும்' என்று சென்னை உயர் நீதிமன்றம் 2019 அக்டோபர் 16ம் தேதி அறிவித்தது. இதனால்தான் வழக்கு நியாயமாக நடந்து முடிந்து, இன்றைக்குக் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது. அந்த வழக்கில் அதிமுகவைச் சேர்ந்தவர்கள் தண்டிக்கப்பட்டிருப்பதால் அதன் கறை தன் மீது விழுந்துவிடக் கூடாது என்பதற்காக சிபிஐ என்ற கேடயத்தைத் தூக்கிக் கொண்டு புனிதர் வேடம் தரிக்க முயல்கிறது அதிமுக.

''சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டதால் குற்றவாளிகள் தண்டனை பெற்றிருக்கிறார்கள்'' எனப் பெருமை அடிக்கும் அதிமுக அன்றைக்கு சிபிஐ எனச் சொல்லி எப்படியெல்லாம் நாடகம் ஆடியது என்பதை மக்கள் அறிவார்கள்.

புகார் அளித்த மாணவியின் சகோதரர் பூபாலனை குற்றவாளிகள் தரப்பு தாக்கியது. வழக்கை திரும்பப்பெற சொல்லி மிரட்டியது. பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்களை எல்லாம் போட்டு அரசாணை வெளியிட்டார்கள். இவையெல்லாம் பாதிக்கப்பட்ட பெண்களின் தரப்பை அச்சுறுத்த அன்றைக்கு இருந்த பழனிசாமி அரசு மேற்கொண்ட அஸ்திரங்கள்.

பொள்ளாச்சி பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்கில், 'வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றம் செய்து மாநில அரசு வெளியிட்டுள்ள அரசாணையைத் திரும்பப் பெற்று, பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் மற்றும் விவரங்கள் குறிப்பிடாத புதிய அரசாணையை வெளியிட வேண்டும். சம்பந்தப்பட்டப் பெண்ணின் பெயரைச் செய்தியாளர்களின் சந்திப்பின்போது பயன்படுத்திய காவல் அதிகாரி மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். பெயரைப் பயன்படுத்தியதால் அப்பெண்ணிற்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக ரூ. 25 லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்' என சென்னை உயர் நீதிமன்றம் மார்ச் 15ம் தேதி உத்தரவிட்டது. இதெல்லாம் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் பழனிசாமி ஆட்சிக்குக் கிடைத்த நற்சான்றிதழ்கள். அதிமுக எவ்வளவு அரசியல் கேவலங்களை அரங்கேற்றினாலும் இறுதியில் உண்மை மட்டுமே வெல்லும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏர்டெல் சேவை பாதிப்பு பயனர்கள் கடும் அவதி

சென்னை, மே.15

இந்தியாவில் ஏர்டெல் மற்றும் ஜியோ ஆகிய 2 நிறுவனங்கள் பிரதான மொபைல் சேவையை வழங்கி வருகின்றன. மற்ற நிறுவனங்கள் சேவை வழங்கினாலும்,

இந்த இரு நிறுவனங்களுக்கே அதிக வாடிக்கையாளர்கள் உள்ளனர். அதேபோல், இந்திய மொபைல் நெட்வொர்க் சந்தையிலும் இவை இரண்டு நிறுவனங்களே போட்டி நிறுவனங்களாக இருந்து வருகின்றன.

இந்நிலையில் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை, தென்காசி,நாகை உள்ளிட்ட நகரங்களில் ஏர்டெல் சேவை சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஏர்டெல் தொலைத்தொடர்பு சேவை பாதிப்பால் வாடிக்கையாளர்கள் அவதி அடைந்துள்ளனர். சிக்னல் கிடைக்காததல் யாரையும் தொடர்புகொள்ள முடியவில்லை என ஏர்டெல் வாடிக்கையாளர்கள் சமூக வலைதளங்களில் தங்களது கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர். ஏர்டெல் சேவை முடக்கத்தால் வணிகர்கள் கடும் அவதி அடைந்துள்ளனர். நான்கு மணி நேரத்திற்குள் சேவையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு சரி செய்யப்படும் என ஏர்டெல் வாடிக்கையாளர் சேவை மைய குழு தகவல் தெரிவித்துள்ளது.

ஏர்டெல் நிறுவனத்தின் நான்காம் காலாண்டு நிகர லாபம் 3 சதவீதம் சரிந்து, ரூ.11,022 கோடியாக உள்ளதாக சில மணி நேரத்திற்கு முன் அந்நிறுவனம் அறிவித்த நிலையில், ஏர்டெல் தொலைத்தொடர்பு சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோதமாக செயல்படும் இறால் பண்ணைகளை மூட நடவடிக்கை: ஐகோர்ட்டு



சென்னை, மே.15

திருவாரூரில் சட்டவிரோதமாக செயல்படும் இறால் பண்ணைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மாவட்ட ஆட்சியருக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தாலுகாவில் உள்ள தில்லைவி ளாகம், உதயமார்த்தாண்டபுரம், தொண்டியக்காடு போன்ற கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களில் உள்ள இறால் பண்ணைகளினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது என்று சென்னை ஐகோர்ட்டில், தில்லைவிளாகம் கிராம பஞ்சாயத்து தலைவர் யோகநாதன் என்பவர் வழக்கு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், இறால் வளர்ப்புக்கு பயன்படுத்தப்படும் ரசாயனங்களால், கிராமங்களில் உள்ள நீர்நிலைகள் பாதிக்கப்படுகிறது.உலக பிரசித்தி பெற்ற உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயத்துக்கு வரும் பறவைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதனால், ஐகோர்ட்டு ஏற்கனவே பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில், விவசாய நிலங்களுக்கு அருகே உள்ள இறால் பண்ணைகளை அகற்ற கலெக்டருக்கு உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி, 2005ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கடலோர மீன்வளர்ப்பு ஆணைய சட்டத்தின்படி உரிமம் பெற்றவர்கள் மட்டுமே கடலோரப்பகுதியில் இறால் பண்ணைகளை நடத்த முடியும். அதுவும் மாவட்ட அளவில் செயல்படும் கமிட்டியிடமும் முறையாக பதிவு செய்யவேண்டும் என்று கூறியுள்ளது. எனவே, மாவட்ட அளவிலான கமிட்டியின் தலைவராக இருக்கும் கலெக்டர், தில்லைவிளாகம் உள்ளிட்ட பகுதியில் ஆய்வுகளை செய்யவேண்டும். அங்கு முறையான உரிமம் இல்லாமலும், அனுமதி பெறாமலும் செயல்படும் இறால் பண்ணைகளை உடனடியாக இழுத்து மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமம் வழங்கும் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறிய இறால் பண்ணைகள் மீதும் இது போல நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் 12 வாரத்துக்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு எடுத்த நடவடிக்கைகளை மனுதாரருக்கு தெரியப்படுத்த வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

15.5.2025

## காவல்துறையில் பெண்கள் 11வது தேசிய மாநாடு: சென்னை தொடங்குகிறது

சென்னை, மே.15

பெண் காவலர்களை கவுரவிக்கும் வகையில் 11வது தேசிய மாநாடு இன்று (புதன்கிழமை) மற்றும் நாளை (வியாழக்கிழமை) வண்டலூர் அருகே உள்ள ஊனமாஞ்சேரியில்அமைந்துள்ள தமிழ்நாடு போலீஸ் அகாடமியில் நடக்கிறது. இந்த மாநாட்டை காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணியகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பெண்களின் பங்கை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டிற்கு பல்வேறு மாநிலங்கள் மற்றும் மத்திய பெண் காவல் அமைப்புகளுக்கு இடையிலான உரையாடல், கலந்தரையாடல் மற்றும் கருத்து பரிமாற்றத்திற்கான ஒருதேசியதளத்தை வழங்குகிறது.



தமிழ்நாட்டில் உள்ள சுமார் 140 மகளிர் காவல் அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். மாநாடடின் கருப்பொருள் 'பெண் காவல்துறை மற்றும் அதிகாரமளித்தல்'. மாநாட்டை மத்தியஉள்துறை அமைச்சகத்தின் இணை மந்திரி நித்தயானந்த் ராய் தொடங்கி வைக்கிறார். மாநாட்டு நிறைவு விழாவில் தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்கிறார்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் ஒவ்வொரு மாநிலம் மற்றும் அமைப்பை சேர்ந்த ஒரு பெண்பிரதிநிதி சிறந்த சாதனைகளுக்காக கவுரவிக்கப்படுவார்.

பல்வேறு தலைப்புகளில் குளோபல் எச்சிஎல் நிறுவனம் சார்பில் ஸ்ரீமதி, திரைப்பட நடிகை ரோகிணி, டாக்டர் ராமசுப்பிரமணியன், ஐகோர்ட்டு முன்னாள் நீதிபதி டாக்டர் பி.எம்.நாயர், தேசிய பேரிடர் மீட்பு படையை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பேச உள்ளனர்

## கூத்தாண்டவர் கோவிலில் பூசாரி கையால் தாலி கட்டிக்கொண்ட திருநங்கைகள் விடிய, விடிய நடனம்



கள்ளக்குறிச்சி, மே.15

கள்ளக்குறிச்சி மாவட்டம் கூவாகம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற கூத்தாண்டவர் கோவில் உள்ளது. 3ம் பாலினமாக கருதப்படும்திருநங்கைகள் தங்களின் குலதெய்வமாக வணங்கும் இக்கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் 18 நாட்கள் சித்திரை திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும்.

இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த மாதம் 29ந்தேதி மாலை சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. தொடர்ந்து பாரதம் பாடும் நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் வரை நடந்தது. இரவில் சாமி வீதி உலாவும் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் மட்டுமின்றி இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் மற்றும் பல்வேறு வெளிநாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான திருநங்கைகள் கடந்த சில நாட்களுக்கு முன்பு விழுப்புரம் மற்றும் கூவாகம் கிராமத்தில் குவிந்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று மாலை அரவான் சாமி கண் திறத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி ஆயிரக்கணக்கான திருநங்கைகள், பட்டுப்புடவை அணிந்தும், தலைநிறைய பூக்களை வைத்துக்கொண்டும், கைநிறைய வளையல்கள், காது, மூக்கு, கழுத்தில் நகைகளை அணிந்து தங்களை புதுமணப் பெண் போல் அலங்கரித்துக் கொண்டு கூத்தாண்டவர் கோவிலுக்கு வந்தனர்.

பின்னர் அங்குள்ள கடைகளில் திருமாங்கல்யம் வாங்கிய திருநங்கைகள், கோவிலுக்குள் சென்று அரவானை பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து, அரவானைதங்கள் கணவனாக பாவித்துக்கொண்டு கோவில் பூசாரி கையால் தாலி கட்டிக் கொண்டனர். திருநங்கைகளோடு வேண்டுதலின்பேரில்ஏராளமானஆண்களும், பெண்களும், சிறுவர், சிறுமிகளும் தாலி கட்டிக் கொண்டனர்.

தாலி கட்டிய பிறகு புதுமணப் பெண் போல் காட்சியளித்த திருநங்கைகள், கூத்தாண்டவர் கோவில் அருகில் இரவு முழுவதும் விடிய, விடிய நடனமாடியும், கும்மியடித்தும் கூத்தாண்டவரை தங்களது கணவராக நினைத்தும் அவரின் அருமை, பெருமைகள் குறித்து ஆடிப்பாடியும் உற்சாகமடைந்தனர்.

இந்நிலையில் விழாவின் 16வது நாள் நிகழ்ச்சியாக இன்று (புதன்கிழமை) அதிகாலை கோவிலில் உள்ள அரவான் சிரசுக்கு முதல் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதன் பிறகு தேரோட்டம் நடக்கிறது.

கோவிலின் 4 மாட வீதிகள் வழியாக பக்தர்கள் வெள்ளத்தில் ஆடி, அசைந்தபடி வரும் தேர், பின்னர் அழிகளம் நோக்கி புறப்பட்டவுடன் திருநங்கைகள் ஒப்பாரி வைத்து அழுவார்கள்.

அதன் பிறகு மதியம் நத்தம் கிராம பந்தலுக்கு தேர் சென்றடைந்ததும் அங்கு அரவான் களப்பலி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். அப்போது திருநங்கைகள் வெள்ளை சேலை அணிந்து விதவைக்கோலம் பூண்டு ஒப்பாரி வைத்து அழுது விட்டுகூவாகத்தில்இருந்து தங்கள் சொந்த ஊருக்கு புறப்பட்டுச்செல்வார்கள்.

## கோடை வெப்பத்தை தணிக்க இலவச ஏ.சி. வழங்கப்படுகிறதா? தமிழக அரசு விளக்கம்



சென்னை, மே.15

தமிழகத்தில் கோடை வெயில் வறுத்தெடுத்து வருகிறது. பகல் நேரங்களில் சூரியனின் கோரப்பார்வையில் இருந்து தப்பிக்க வீடு, அலுவலகங்களில் பெரும்பாலானோர் தஞ்சம் அடைகின்றனர். தவிர்க்கமுடியாத காரணத்துக்காக வெளியே வருபவர்களும் மரத்தின் நிழலிலும், மேம்பாலங்களின் கீழேயும், பஸ் நிறுத்தங்களிலும் என சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு பின்னர் செல்கின்றனர். வெயிலின் உஷ்ணம் கடுமையாக இருப்பதால் வீடுகளில் மின்விசிறிகள் ஓய்வின்றி இயங்குகின்றன. இதில் அவ்வப்போது ஏற்படும் மின்வெட்டு மக்களுக்கு கூடுதல் தலைவலியை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையில், 'கோடைகால வெப்பத்தை தணிக்க மத்திய அரசு இலவசமாக 5 ஸ்டார் ஏ.சி. வழங்குகிறது. இதனை மாநில அரசின் இணையதளம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்' என்ற தகவல்கள் அடங்கிய வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. இதற்கு தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசின் அதிகாரபூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிப்பார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "இது முற்றிலும் வதந்தியே. மத்திய அரசு இப்படியான எந்த திட்டத்தையும் அறிவிக்கவில்லை. இது வதந்தி என்று மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் மறுத்துள்ளது" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## முதுமலையில் யானைக்கு கரும்பு வழங்கி மகிழ்ந்த முதல்வர்

கூடலூர், மே.15

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 5 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று முன்தினம் ஊட்டி சென்றார். நேற்று மாலை 5.30 மணிக்கு முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமுக்கு சென்றார். ஆதிவாசி மக்கள் பாரம்பரிய இசைக் கருவிகளை இசைத்தபடி நடனமாடி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து அவர், தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாம் வளாகத்தில் பாகன்கள் குடும்பத்தினருக்கு ரூ.5.06 கோடி செலவில் கட்டப்பட்ட 44 வீடுகள் மற்றும் விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்தார். மேலும் அங்கு மரக்கன்றுகள் நட்டார்.

அதன்பிறகு லண்டானா, உன்னி செடிகளின் குச்சிகளை கொண்டு வடிவமைக்கப்பட்ட யானைகளின் உருவங்களை பார்வையிட்டார்.

மேலும் தமிழக வனத்துறை சார்பில் வனச்சரகர்களின் பயன்பாட்டுக்காக ரூ.2 கோடியே 93 லட்சம் மதிப்பிலான 32 புதிய வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதேபோல் வனவிலங்குகள் பாதிக்கப்படாமல் இருக்க தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 15 கிலோ மீட்டர் நீளத்துக்கு ரூ.5 கோடியில் முதுமலை வனப்பகுதி வழியாக (வான்வெளி தொகுப்பு கம்பிகள்) உயர் அழுத்த மின்சாரம் கொண்டு செல்லும் கேபிள் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

முதுமலையில் மொத்தம் ரூ.12 கோடியே 99 லட்சம் மதிப்பிலான திட்டங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து வளர்ப்பு யானைகளுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்கரும்புகள்கொடுத்து மகிழ்ந்தார். பின்னர் எலிபன்ட் விஸ்பெரர்ஸ் என்ற ஆஸ்கார் விருது பெற்ற குறும்படத்தில் நடித்த பொம்பன், பெள்ளியை சந்தித்து பேசினார். மேலும் அவர்களுக்கு பரிசுத்தொகுப்பு வழங்கினார்.

அதைத்தொடர்ந்து அவர், வனத்துறை அதிகாரிகளிடம் வளர்ப்பு யானைகள் பராமரிப்பு குறித்து கேட்டறிந்தார். அப்போது அவரது மனைவி துர்கா ஸ்டாலின், ஆ.ராசா எம்.பி. மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் உடன் இருந்தனர். முன்னதாக ஊட்டியில் இருந்து முதுமலைக்கு செல்லும் வழியில் மாவனல்லா பகுதியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சாலையோரம் திரண்டு நின்ற பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்தார். முதுமலையில் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மாலை 6.30 மணிக்கு முதல்அ மைச்சர் மு.க.ஸ்டாலின் ஊட்டிக்கு புறப்பட்டு வந்தார்.

## தமிழகத்தில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவை முன்கூட்டியே வெளியிட திட்டமா?



சென்னை, மே.15

பிளஸ்2 மாணவமாணவிகளுக்கான பொதுத்தேர்வு முடிவு மே 9ந்தேதி வெளியாகும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டு இருந்த நிலையில், ஒரு நாள் முன்கூட்டியே அதாவது 8ந்தேதி வெளியிடப்பட்டது.

அதேபோல், சுமார் 8 லட்சத்து 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் எழுதிய 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவும் முன்கூட்டியே வெளியாகுவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாக கடந்த சில நாட்களாகவே பேசப்பட்டு வருகிறது. ஏற்கனவே தேர்வு அட்டவணை வெளியிட்டபோது, மே மாதம் 19ந்தேதி (திங்கட்கிழமை) 10ம்வகுப்பு பொதுத்தேர்வு முடிவு வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் தேர்வு முடிவை வெளியிடுவது குறித்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியுடன், அரசுத் தேர்வுத்துறை அதிகாரிகள் நேற்று ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. முன்கூட்டியே தேர்வு முடிவை வெளியிடுவது பற்றி முடிவெடுக்கப்பட்டு இருந்தால் இன்றோ (புதன்கிழமை) அல்லது நாளையோ (வியாழக்கிழமை) அதுதொடர்பான அறிவிப்பு வெளியாகும். அப்படி இல்லையென்றால், ஏற்கனவே தெரிவித்து இருந்த தேதியில் தான் தேர்வு முடிவு வெளியாகும் என்று சொல்லப்படுகிறது.

## காதல் படங்கள் எடுக்காதது ஏன்? வெற்றிமாறன் விளக்கம்



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனராக திகழும் வெற்றிமாறனுக்கு ஏராளமான ரசிகர்கள் உண்டு. 'விடுதலை2' படத்தை தொடர்ந்து தற்போது சூர்யாவின் நடிப்பில் 'வாடிவாசல்' படத்தை இயக்க உள்ளார். வாடிவாசல் படத்திற்கான படப்பிடிப்பு பணிகள் ஆகஸ்ட் மாதம் துவங்க உள்ளதாக கூறப்படுகிறது. அதற்கான பணிகளில் வெற்றிமாறன் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கிடையில் தனது சினிமா பயணம் குறித்து வெற்றிமாறன் மனம் திறந்து உள்ளார். அவர் கூறும்போது, "ஒரு படத்தை எடுத்து முடிக்க எவ்வளவு காலமாகும்? என்பதை இயக்குனர் தவிர வேறு யாரும் தீர்மானிக்க முடியாது, தீர்மானிக்கவும் கூடாது. சமீபத்தில் ஒரு பெண், உதவி இயக்குனராக சேர என்னிடம் வந்தார். அவரை பார்க்கும்போது 20 வருடங்களுக்கு முன்பு என்னை பார்த்தது போலவே இருந்தது. சினிமாவில் பெண் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் அதிகம் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். தற்போது சினிமாவில் பெண்கள் சாதித்து வருவதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் வன்முறை படங்களை காட்டிலும் காதல் படங்களை தான் அதிகம் தேர்வு செய்வேன். ஆனால் ரசிகர்களின் எதிர்பார்ப்பு வேறு மாதிரியாக இருக்கிறது. அதனால் தான் என்னவோ காதல் படங்கள் கைகூடாமல் போய் வருகிறது" என்றார்.

## 'பென்ஸ்' பட பூஜையில் கலந்து கொண்ட சிவகார்த்திகேயன்.. வைரலாகும் புகைப்படம்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் ராகவா லாரன்ஸ். இவர் தற்போது லோகேஷ் கனகராஜ் தயாரிக்கும் 'பென்ஸ்' படத்தில் நடிக்கிறார். லோகேஷ் கனகராஜின் 'ஜி ஸ்குவாட்' நிறுவனம் தயாரிக்க உள்ள இப்படத்தை 'ரெமோ' பட இயக்குனர் பாக்யராஜ் கண்ணன் இயக்குகிறார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் இதற்கு முன்பு வெளிவந்த 'விக்ரம், கைதி, லியோ' போன்ற படங்களை போல, 'பென்ஸ்' படமும் (லோகேஷ் சினிமாடிக் யூனிவர்ஸ்) எல்.சி.யூவில் இணைந்துள்ளது. இதனால் இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது.

இந்த நிலையில் இப்படத்தின் படப்பிடிப்பு நேற்று பூஜையுடன் துவங்கி இருக்கிறது. இது தொடர்பான புகைப்படங்களையும், வீடியோவையும் படக்குழு வெளியிட்டு இருந்தது. இந்தநிலையில் இந்த பூஜையில் நடிகர் சிவகார்த்திகேயனும் கலந்து கொண்டுள்ளதாக அவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை படக்குழு பகிர்ந்துள்ளது. இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## சூர்யா 46 படத்தில் கேமியோ ரோலில் விஜய் தேவரகொண்டா



நடிகர் சூர்யா தற்போது தனது 45வது படத்தில் நடித்து வருகிறார். ஆர்.ஜே.பாலாஜி இயக்கி வரும் இப்படத்தில் திரிஷா கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தை தொடர்ந்து சூர்யாவின் 46வது படத்தை 'லக்கி பாஸ்கர்' பட இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்குகிறார்.

சித்தாரா என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 46' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஜிவி பிரகாஷ் இசையமைக்க உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்க உள்ளது.

இந்த நிலையில், சூர்யா 46 படத்தில் நடிகர் விஜய் தேவரகொண்டோ கேமியோ ரோலில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கிடையில், ஐதராபாத்தில் நடைபெற்ற 'ரெட்ரோ' படத்தின் பிரீ ரிலீஸ் நிகழ்ச்சி விஜய் தேவரகொண்டா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## "தி வெர்டிக்ட்" படத்தின் "திருடா" பாடல் வெளியானது

அக்னி என்டர்டெய்ன்மென்ட் பட நிறுவனத்தின் சார்பில் பிரகாஷ் மோகன் தாஸ் என்பவர் தயாரிப்பில் அறிமுக இயக்குனர் கிருஷ்ணா சங்கர் இயக்கியுள்ள படம் □தி வெர்டிக்ட்'. வரலட்சுமி சரத்குமார், ஸ்ருதி ஹரிஹரன், சுகாசினி, வித்யுலேகா ராமன் மற்றும் பிரகாஷ் மோகன்தாஸ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் கொலையும் கொலை சார்ந்த புலனாய்வுக் கதையாக உருவாகி உள்ளது.

சமீபத்தில் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை சரத்குமார் வெளியிட்டார். இதற்கிடையில் இந்த படத்தினை பற்றி கூறிய இயக்குனர் கிருஷ்ணா சங்கர், "இந்தக் கதை முழுக்க முழுக்க அமெரிக்காவில் படமாக்கப்பட்டுள்ளது. மர்மமான மர்டர் மிஸ்டரி திரில்லர் கதையில் உருவாகியுள்ள இப்படம் பார்வையாளர்களுக்கு புதிய திரை அனுபவத்தைக் கொடுக்கும்" என்று தெரிவித்துள்ளார். இந்த படத்தில் நடிகை வரலட்சுமி சரத்குமார் வழக்கறிஞராக நடித்துள்ளார். கிரைம் திரில்லர் இன்வெஸ்டிகேஷன் கதைக்களத்தில் உருவாகியுள்ள 'தி வெர்டிக்ட்' படம் வரும் மே 30ம் தேதி வெளியாக உள்ளது. இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், 'தி வெர்டிக்ட்' படத்தின் 'திருடா' பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது.

## விராட், ரோகித் இல்லாதது அவர்களுக்குத்தான் நல்லது இங்கிலாந்து முன்னாள் வீரர்



இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூன்) 20ந் தேதி முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்த நாட்டு அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்த போட்டி தொடருக்கான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

இந்த தொடருக்கு முன்னதாக இந்திய ரசிகர்களுக்கு அதிர்ச்சியளிக்கும் விதமாக ரோகித்சர்மாமற்றும்விராட்கோலிடெஸ்ட்போட்டிகளில்இருந்துவிடைபெற்றனர். இதனால் விராட் மற்றும் ரோகித் இல்லாமல் இந்திய அணி இங்கிலாந்து டெஸ்ட் தொடரை எப்படி வெல்லப்போகிறது என்பது குறித்த கேள்வியும் எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்திய அணியில் இருந்து விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் ஓய்வு பெற்றது இங்கிலாந்து அணிக்கு மேலும் பலத்தை சேர்த்துள்ளதாக அந்த அணியின் முன்னாள் வீரர் மொயின் அலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "நிச்சயமாக, இது இங்கிலாந்துக்கு மிகப்பெரிய ஊக்கமளிக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த இரண்டு வீரர்களுமே இந்திய அணிக்காக பலகாலம் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர்கள். ஆனால் அவர்களிடம் தற்போது இங்கிலாந்தில் விளையாடிய அனுபவம் இல்லாத வீரர்கள் உள்ளனர், அதுதான் இங்கிலாந்தில் உங்களுக்கு தேவையான ஒன்று. இது இங்கிலாந்துக்கு ஒரு சிறந்த வாய்ப்பு என்று நான் நினைக்கிறேன்.

சச்சினுக்கு பிறகு மைதானத்தில் ரசிகர்கள் அதிகம் எதிர்பார்க்கும் வீரராக விராட் கோலி திகழ்ந்து வந்தார். விராட் கோலி விளையாடினாலே டெஸ்ட் போட்டி என்றாலும் ரசிகர்களின் வருகை அதிகமாக இருக்கும். அந்த அளவிற்கு அவர் ஒரு மிகச்சிறப்பான வீரர். ரோகித் கடைசியாக இங்கிலாந்தில் மிகவும் சிறப்பாக விளையாடியது எனக்கு நினைவிருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக ரோகித் சர்மா இந்திய அணியை மிகச்சிறப்பாக வழி நடத்தி வந்தார். அவர்கள் இருவரும் இல்லாதது டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு மட்டும் இழப்பு கிடையாது இந்திய அணிக்கும் மிகப்பெரிய இழப்பு. அவர்கள் இருவரும் இந்த தொடரில் விளையாடாதது எங்களுக்குத்தான் சாதகம்" என்று கூறினார்.

## டெஸ்டில் இருந்து ஓய்வு: பி.சி.சி.ஐ. ஒப்பந்தத்தில் சரிவை சந்திக்கும் விராட், ரோகித்..?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளனர். எதிர்வரும் இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன் இருவரும் ஓய்வை அறிவித்துள்ளது ரசிகர்களிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா இருவரும் பி.சி.சி.ஐ.ன் வருடாந்திர ஒப்பந்த பட்டியலில் சரிவை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இவர்கள் ஏற்கனவே சர்வதேச டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் முன்னணி வீரர்கள் என்பதால் அவர்களுக்கு ஏ+ கிரேடில் ரூ.7 கோடி சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்தும் அவர்கள் ஓய்வு பெற்று விட்டதால் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாட இருக்கிறார்கள். இதனால் அவர்களின் ஒப்பந்தத்தை பி.சி.சி.ஐ. மறுபரிசீலனை செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன் காரணமாக இருவரும் ரூ. 5 கோடி சம்பளம் உள்ள ஏ அல்லது ரூ.3 கோடி சம்பளம் உள்ள பி கிரேடுக்கு மாற்றப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக ஏ+ கிரேடில் ரோகித் மற்றும் விராட் கோலி உடன் ஜஸ்பிரித் பும்ரா மற்றும் ஜடேஜா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வு குறித்த செய்திகள்... ஷமி கொடுத்த பதிலடி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி தற்போது ஐ.பி.எல். தொடரில் விளையாடி வருகிறார். கடந்த ஒருநாள் உலகக்கோப்பை தொடரின்போது ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்ட அவர் அதிலிருந்து முழுமையாக குணமடைய பல மாதங்கள் ஆகியது. அதன்பின் குணமடைந்த அவர் உள்ளூர் தொடர்களில் விளையாடி இழந்தை பார்மை மீட்டெடுத்தார். பின்னர் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபியில் விளையாடினார். தற்போது ஐ.பி.எல். தொடரில் விளையாடி வரும் அவரால் முன்பு போல் பந்து வீச முடியவில்லை எனவும், அவர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இதனால் ரோகித், கோலி வரிசையில் முகமது ஷமியும் ஓய்வு பெற்றுவிடுவார் என செய்திகள் வெளியாகின. இந்நிலையில் ஓய்வு குறித்த செய்திகளுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக முகமது ஷமி, அந்த செய்தியின் ஸ்கிரீன்ஷாட்டை எடுத்து தனது இன்ஸ்டாகிராம்பக்கத்தில்பதிவிட்டுள்ளதுபின்வருமாறு: "ரொம்ப நல்லது மகாராஜ். உங்கள் வேலையில் மீதமுள்ள நாட்களை நீங்கள் எண்ண வேண்டும். சில நேரங்களில் நீங்கள் ஏதாவது நல்லதை சொல்ல வேண்டும். இது இன்றைய நாளின் சிறந்த கதை, மன்னிக்கவும்" என்று பதிவிட்டுள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 12002852826‌6
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.